<u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
<u>கொழும்பு</u>

**ஊடக அறிக்கை**

**************************

## வெசாக் வாரத்தில் இந்திய பௌத்த மரபு குறித்த கண்காட்சி நாகரிக பிணைப்பை பிரதிபலிக்கின்றது

புத்த ரஷ்மி தேசிய வெசாக் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் இந்தியாவின் கீர்த்திமிகு பௌத்த மரபு குறித்த கண்காட்சி ஒன்று கொழும்பு கங்காராமை சீமாமாலகயவில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

2. ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் கங்காராமை விகாரை ஆகியவை ஒன்றிணைந்து ஒழுங்கமைத்த இந்த கண்காட்சியின் பூர்வாங்க நிகழ்வுகள் 2023 மே 03 ஆம் திகதி நடைபெற்ற நிலையில் இலங்கை ஜனாதிபதி அதி மேதகு ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே ஆகியோருடன் ஏனைய சிரேஸ்ட அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்களும் கலந்துகொண்டிருந்தனர். வெசாக் போயா தினத்தில் புத்தபெருமானின் பிறப்பு, ஞானம் பெற்றமை மற்றும் மகாபரிநிர்வாண நிலையினை அடைந்தமை ஆகியவற்றை இந்த விசேட கண்காட்சி பிரதிபலிக்கின்ற அதேவேளை இந்தியா இலங்கை இடையிலான நாகரிக பிணைப்பினையும் சுட்டிக்காட்டுகின்றது.

3. உலகப் பிரசித்திபெற்ற யுனெஸ்கோ மரபுரிமைச் சின்னமான இந்தியாவின் அஜந்தா குகைகளில் ஜாதக கதைகள் மற்றும் புத்த பெருமானின் வாழ்வின் முக்கிய தருணங்களை சித்தரிக்கும் ஓவியங்களின் மீளுருவாக்கமான டிஜிட்டல் ஓவியங்கள் இந்த கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவின் மகாராஷ்டிராவில் உள்ள பௌத்த குகை நினைவுச்சின்னங்களான

அஜந்தா குகைகள் கிமு 2 மற்றும் 1 ஆம் நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்துக்குரியவை.

4. உலகளாவிய ரீதியிலும் இந்தியாவிலுமுள்ள பௌத்த மரபுகளை மீட்டு அவற்றைப் பாதுகாப்பதில் இந்தியா மேற்கொண்டிருக்கும் தளராத முயற்சிகளின் மற்றொரு சான்றே இந்த கண்காட்சியாகும். இந்த கண்காட்சியை வடிவமைத்த திரு அங்குர் நைக் மற்றும் திரு பிரசாத் பவார் ஆகியோர் புகழ்மிக்க 'பத்மபாணி'யின் 'பத்ம' வடிவத்தினை டிஜிட்டல் முறையில் பசால்ட் கல்லில் மீள வடிவமைத்து ஜனாதிபதி அதி மேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு பரிசளித்ததுடன், இம்முயற்சி அஜந்தா குகையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் மீளுருவாக்க பணிகளின் சிறந்த உதாரணமாகும்.

5. 2023 ஏப்ரல் 20-21 இல் இந்தியாவின் புது டில்லியில் நடைபெற்ற முதலாவது உலக பௌத்த மாநாட்டிலும் இந்தக் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இம்மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இந்தக் கண்காட்சியினைப் பார்வையிட்டிருந்தமை அதன் சிறப்பம்சமாகும்.

6. இதேவேளை கொழும்பில் நடைபெறும் கண்காட்சி 2023 மே 05 ஆம் திகதி முதல் 07 ஆம் திகதி வரை பொதுமக்களின் பார்வைக்காக திறக்கப்பட்டிருக்கும்.

***

**கொழும்பு**
**04 மே 2023**